THE EDUCATION STATE

EARLY CHILDHOOD

# நிலைமாற்றம்: பாடசாலைக்கு உடன்பாடான ஒரு தொடக்கம்

## *Transition Learning and Development Statement* -ஐ நிரப்புவதற்கு குடும்பங்களுக்கு உதவும் வழிகாட்டல்கள்

### பாடசாலைக்குச் செல்ல ஏற்புறுதியான ஒரு தொடக்கம் ஏன் முக்கியம்?

பாடசாலைக்குச் செல்ல ஏற்புறுதியான ஒரு தொடக்கம் இருப்பது, நிலைமாற்றக் காலம் மற்றும் அதற்கு அப்பாலான காலகட்டம் ஆகிய இரண்டின் போதும் உங்களுடைய குழந்தைக்கு சிறந்த கற்றலுக்கும் நலவாழ்வுப் பலன்களுக்கும் வழிவகுக்கும். வினைத்திறனானதும் ஏற்புறுதியானதுமான நிலைமாற்றங்களை உறுதிசெய்வது உங்களுடைய குழந்தையின் கற்றல் மற்றும் வளர்ச்சி தொடர்வதற்கும் கூட ஆதரவளிக்கும். உங்களுடைய குழந்தையின் முந்தைய மற்றும் தற்போதைய அனுபவங்களின் அடிப்படையில் கட்டமைப்பது அவர்களைப் பாதுகாப்பாக, நம்பிக்கையாக உணரச் செய்வதற்கும் மக்கள், இடங்கள், நிகழ்வுகள், வழக்கங்கள் மற்றும் புரிந்துணர்வுகளுடன் தொடர்புபட்டிருக்கவும் உதவும் என்று, தொடர்ச்சியான கற்றலின் மீது அதிக அழுத்தம் கொடுப்பது கண்டறியும். பாடசாலைக்குச் செல்ல ஏற்புறுதியான தொடக்கம் இருப்பது, இளம் பிள்ளைகளுக்கு இடையே நெகிழ்ச்சித்தன்மையை முன்னேற்றுவதில் நேரடித் தொடர்பைக் கொண்டுள்ளது.

### *TRANSITION LEARNING AND DEVELOPMENT STATEMENT* என்பது என்ன?

ஆரம்பகட்ட குழந்தைப்பருவச் சேவைகள், பாடசாலைகள், பாடசாலை இல்லாத நேரங்களில் கவனிக்கும் (Outside School Hours Care -OSHC) சேவைகள் மற்றும் குடும்பங்கள் ஆகிய அனைத்துமே குழந்தைகளின் கற்றல் மற்றும் நலவாழ்வை ஊட்டிவளர்ப்பதில் கூட்டாளர்கள் ஆகும். சேவைகள், பாடசாலைகள் குடும்பங்கள் ஆகியவற்றுக்கு இடையில் தகவலைப் பகிர்வதைச் சுலபமாக்குவதற்காக ஒவ்வொரு குழந்தையும் பாடசாலைக்குச் செல்கையில் அவருக்கான ஆரம்பகட்ட குழந்தைப்பருவச் சேவையால் தனிப்பட்ட Transition Learning and Development Statement (நிலைமாற்ற அறிக்கை) எழுதப்படுகிறது.

நிலைமாற்ற அறிக்கையானது உங்களுடைய குழந்தையின் கற்றல், அபிவிருத்தி மற்றும் நலவாழ்வு பற்றிய தகவல்களை ஆரம்பகால குழந்தைப்பருவச் சேவைகள் மற்றும் பாடசாலைகளுக்கு இடையில் பகிரும். நிலைமாற்ற அறிக்கையானது உங்களுடைய குழந்தையின் ஆர்வங்கள், திறமைகள் மற்றும் ஆற்றல்களைத் தொகுத்துக் கூறும், மேலும் உங்களுடைய குழந்தையின் கற்றல் பயணத்தில் அவருக்கு ஆதரவளிக்கும் தனிப்பட்ட அணுகுமுறைகளையும் கற்பித்தல் உத்திகளையும் அடையாளம் காட்டும்.

உங்களுடைய குழந்தை, பாடசாலைக்கு நிலைமாறும் போது, அவரது கற்றல் பற்றி விளங்கிக்கொள்ள, அதற்கு ஆதரவாக இருக்க, அதைப்பற்றித் தகவலறிய மற்றும் ஆதரித்துப் பேச, நிலைமாற்ற அறிக்கை உங்களுக்கு உதவலாம். நிலைமாற்ற அறிக்கையிலுள்ள தகவலானது அடுத்த வகுப்பு ஆசிரியர்கள் உங்களுடைய குழந்தையைப் பற்றி அறிந்துகொள்ளவும், பொருத்தமான கற்றல் மற்றும் கற்பித்தல் நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதற்கும் உதவும். உங்களுடைய குழந்தையை OSHC-இல் கலந்துகொள்ள விடுவதற்குத் திட்டமிடுகிறீர்கள் என்றால், நிலைமாற்ற அறிக்கையானது OSHC சேவையில் உங்களுடைய குழந்தையின் ஈடுபாட்டுக்காகத் திட்டமிடுவதற்கும் அமைப்புகளுக்கு இடையில் தொடர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் கூட OSHC பயிற்றுநர்களுக்கு உதவும்.

நிலைமாற்ற அறிக்கையில், உங்களுடைய குழந்தையின் பெயர், பிறந்த திகதி, புகைப்படம், உங்களுடைய பெயர் மற்றும் தொடர்பு விபரங்கள் உட்பட சில தனிப்பட்ட தகவல்களும் இருக்கும். இதில் உங்களுடைய குழந்தைக்கு ஆதரவளிக்கின்ற இதர ஆரம்பகட்ட குழந்தைப்பருவ நிபுணர்களின் பெயர் மற்றும் தொடர்பு விபரங்களும் கூட இருக்கும்.

உங்களுடைய குழந்தையின் நிலைமாற்ற அறிக்கைக்குப் பங்களிப்பது என்பது பாடசாலைக்குச் செல்ல நிலைமாறும் செயற்பாடுகளில் ஒன்றாகும், மேலும் உங்கள் குழந்தை, பாடசாலை தொடங்குவதற்கு முன்பும் பாடசாலை நடக்கும் வருடம் முழுவதும் நீங்களும் உங்களுடைய குழந்தையும் பங்களிக்கலாம்.

### நான் நிலைமாற்ற அறிக்கையின் எந்தப் பகுதியை நிரப்ப வேண்டும்?

*பிரிவு 1* மற்றும் *1.1* ஆகியவை உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவப் பயிற்றுநரால் நிரப்பப்படும்.

பிரிவு *1.2* ஆனது, உங்களுடைய குழந்தைக்கு வளர்ச்சித் தாமதம் அல்லது இயலாமை இருந்தால், உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவப் பயிற்றுநரால்

VICTORIA State Government | Education and Training

நிரப்பப்படும். உங்களுடைய குழந்தைக்கு ஆதரவாக இருக்கும் ஏனைய ஆரம்பகட்ட குழந்தைப்பருவ நிபுணர்களும் கூட இந்தப் பிரிவில் பங்களிக்கலாம்.

*பிரிவு 2: குழந்தை* என்ற பிரிவானது உங்கள் குழந்தையால் அவருக்குத் தெரிந்த, சௌகரியமாக உணரும் பெரியவர் ஒருவருடன் சேர்ந்து நிரப்பப்படும். இந்தப் பெரியவராக நீங்கள் அல்லது உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவ பயிற்றுநர் இருக்கலாம்.

*பிரிவு 3: குடும்பம்* என்ற பிரிவை நீங்கள் நிரப்ப வேண்டும். உங்களுடைய குழந்தையின் நிலைமாற்ற அறிக்கைக்கு உங்களுடைய தொலைநோக்குக் கருத்துகளைப் பங்களிப்பது உங்களுக்கு முக்கியமாகும். இந்தப் பிரிவில் உங்களைத் தூண்ட உதவுகின்ற வரிசையான கேள்விகள் இருக்கும். இந்தக் கேள்விகளில் சிலவற்றுக்கு அல்லது அனைத்திற்கும் விடையளிப்பது, உங்கள் குழந்தையின் ஆசிரியரும் OSHC பயிற்றுநரும் (பொருந்தினால்) உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்தினருக்கும் பொருத்தமான வழிகளில் பதிலளிப்பதற்கு உதவலாம், மேலும் உங்களுடைய குழந்தையின் கற்றல் மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்.

## நிலைமாற்ற அறிக்கையின் எனது பகுதியை நிரப்பிய பிறகு என்ன நடக்கும்?

நீங்கள் *பிரிவு 3: குடும்பம்* என்ற பிரிவை நிரப்பியதும், அப்பிரிவை உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவப் பயிற்றுநரிடம் திருப்பியளியுங்கள். உங்களுடைய குழந்தை *பிரிவு 2: குழந்தை* என்ற பிரிவை நிரப்ப நீங்கள் உதவி செய்திருந்தால், அதை பிரிவு 3 உடன் சேர்த்துத் திருப்பியளியுங்கள்.

உங்களுடைய குழந்தையின் ஆரம்பகால குழந்தைப்பருவ பயிற்றுநர் இந்த நிலைமாற்ற அறிக்கையின் அனைத்துப் பிரிவுகளையும் ஒன்றிணைத்து, உங்களுக்கு முழுமையான ஒரு பிரதியை வழங்குவார்.

உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவப் பயிற்றுநர் முழுமையான நிலைமாற்ற அறிக்கையின் பிரதியை உங்களுடைய குழந்தையின் பாடசாலை மற்றும் OSHC சேவையுடனும் (பொருந்தினால்) கூட பகிர்ந்துகொள்வார்.

உங்களுடைய குழந்தை எந்தப் பாடசாலைக்குச் செல்லப் போகிறார் என்று சரியாகத் தெரியாவிட்டால், உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவப் பயிற்றுநர் அந்த நிலைமாற்ற அறிக்கையின் இரண்டாம் நகலை உங்களிடம் அளிப்பார், எனவே உங்களுடைய குழந்தையைப் பாடசாலையில் சேர்க்கும் போது நீங்கள் ஒரு நகலை அவர்களிடம் வழங்கலாம்.

*பிரிவு 3: குடும்பம்* என்ற பிரிவை சேவையிடம் திருப்பியளிக்காவிட்டால், உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவப் பயிற்றுநர் பூர்த்தி செய்த பிரிவுகளை உங்களுடைய குழந்தையின் பாடசாலை மற்றும் OSHC சேவையுடன் (பொருந்தினால்) பகிர்ந்து, பகிரப்பட்ட பிரிவின் நகலை வைத்திருப்பதற்காக உங்களிடமும் வழங்குவார்.

பாடசாலைகள் வழங்கிய ஆராய்ச்சியும் கருத்தும், இந்தத் தகவலைப் பகிர்வது பாடசாலைக்கு வெற்றிகரமாக நிலைமாறுவதற்கு உதவுவதாகக் குறிப்பிட்டுள்ளன. எனினும், உங்களுடைய குழந்தையின் பாடசாலையுடன் உங்களுடைய குழந்தையைப் பற்றிய ஏதேனும் தொடர்பான தகவல் பகிரப்படுவதை நீங்கள் விரும்பாவிட்டால், இதை உங்களுடைய குழந்தையின் ஆரம்பநிலை குழந்தைப்பருவப் பயிற்றுநருடன் கலந்துரையாடுங்கள்.

## மேலதிக தகவலுக்கு

Www.education.vic.gov.au/transitiontoschool -ஐப் பாருங்கள்

இந்த ஆவணமானது பல சமூக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அவற்றை www.education.vic.gov.au/transitiontoschool-இல் பார்க்கலாம்.